FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8129381

1. District : தூத்துக்குடி PS: VSAC Year: 2025 FIR No.: 05 Date: 25.6.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: 106
(ii) Act சட்டம்: PC ACT 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 7, 7A, 8 r/w 12
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 25.6.2025 Date to : 25.6.2025
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 14.00 hrs Time to : 17.30 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 25.6.2025 Time : 21.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Typed complaint
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 50 km South east
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : Madukkoor, Sub registar office
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : M. அய்யம்பெருமாள் (b) Father's/ Husband's Name : முத்துசாமி
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : மாவட்ட துணை ஆய்வகக்கு அலுவலர் (g) Address : தூத்துக்குடி மாவட்டம்
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

தனித் தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

-

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

-

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனி நாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

25.6.25

25.6.25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. ARUN PRASAD.
Rank: நிலை Inspector of Police, No. எண் .....
VAC. Thanjavur.

FIR Contents in Column Number 12 of the Thanjavur V&AC Crime Number 05/2025, U/s 106 of BNSS and 7, 7A, 8 r/w 12 of Pc Act 1988 (as amended in 2018)-ன்தொடர்ச்சி..

பணிந்து சமர்பிக்கப்படுகிறது...

இன்று 25.06.2025–ஆம் தேதி இரவு 21.00 மணிக்கு தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருந்த போது தஞ்சாவூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் M. அய்யம்பெருமாள் அவர்கள் கொடுத்த புகாரைப் பெற்று வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு, அனுப்புநர் M.அய்யம்பெருமாள், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் மாவட்டம், பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தஞ்சாவூர் ஐயா, தஞ்சாவூர் மாவட்டம், துணை ஆய்வுக் குழு அலுவலராகிய நான் ரகசிய தகவலின் படி தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் அலுவலர்களுடன் இன்று 25.06.2025–ம் தேதி மதியம் 14.00 மணி முதல் 17.30 மணி வரை பட்டுக்கோட்டை தாலுக்கா மோகூர் கிராமத்தில் அமைந்துள்ள மதுக்கூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. திடீர் சோதனையின் போது கணக்கில் வராத கையூட்டு தொகைகளை வைத்திருந்த 1.திரு.A.செல்வம், மதுக்கூர் சார்பதிவாளர்(பொறுப்பு) என்பவரிடமிருந்து ரூபாய் 50,000/–, 2. திரு.சி.வெங்கடேஷ் (தனி நபர்) என்பவரிடம் ரூபாய் 5,500 மற்றும் 3. திரு.மு.முருகானந்தம் (தனிநபர்–பத்திர எழுத்தர்) என்பவரிடம் ரூபாய் 14,340/–, ஆக மொத்தம் ரூபாய் 69,840/–ஐ மேற்படி மதுக்கூர் சார்பதிவாளர்(பொறுப்பு) மற்றும் தனிநபர்களுடன் குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்ற பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலும் கணக்கில் வராத கையூட்டு பணம் என்ற சந்தேகத்தின் பேரிலும் திடீர் சோதனை நடவடிக்கைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனை நடவடிக்கையின் விபரம் பின்வருமாறு, இன்று 25.06.2025ஆம் தேதி தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்திலிருந்தபோது, தஞ்சாவூர் வருவாய் மாவட்டம், பட்டுக்கோட்டை பதிவு மாவட்டம், பட்டுக்கோட்டை தாலுக்கா, மோகூர் கிராமத்தில் மதுக்கூர் – மன்னார்குடி செல்லும் சாலையின் இடதுபுறம் அண்டமி கிராமத்திற்கு செல்லும் சாலையில் இடதுபுறம் அமைந்துள்ள மதுக்கூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்ய வருபவர்களிடம் மதுக்கூர் சார்பதிவாளர் அவர்களால் கையூட்டாக பணம் வசூல் செய்து வருவதாக தஞ்சாவூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் வட்டாட்சியர் திரு,M.அய்யம்பெருமாள் மற்றும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்

H–பிரிவில் பணிபுரியும் இளநிலை வருவாய் ஆய்வாளர் திரு.ரா.அப்துல் அஜீஸ் ஆகியோர்களுக்கு கிடைத்த தகவலை தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்திற்கு முற்பகல் 11.30 மணிக்கு வந்து தெரிவித்ததன்பேரில், இன்று 25.06.2025 பிற்பகல் 12.30 மணிக்கு தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்திலிருந்து காவல் ஆய்வாளர் திரு.R.அருண்பிரசாத் அவர்கள் ஆய்வுக்குழு அலுவலர்கள் மற்றும் போலீஸ் பார்ட்டியினருடன் புறப்பட்டு, மேற்படி மதுக்கூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பிற்பகல் 13.30 மணியளவில் மேற்படி அலுவலகத்திற்கு வந்து திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் சோதனை நடவடிக்கைகள் 25.06.2025 பிற்பகல் 14.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது.

2) மேற்படி திடீர் சோதனையின் போது மாவட்ட துணை ஆய்வுக்குழு மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குழுவில் இருந்த அலுவலர்கள் விபரம்:

(1) திரு,M.அய்யம்பெருமாள், வட்டாட்சியர் மற்றும் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர்.

(2) திரு. திரு.ரா.அப்துல் அஜீஸ், இளநிலை வருவாய் ஆய்வாளர், H–பிரிவு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தஞ்சாவூர்.

(3) திரு.R.அருண்பிரசாத், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தஞ்சாவூர்.

(4) திரு.M.சரவணன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தஞ்சாவூர்.

3) மேற்படி மதுக்கூர் சார்பதிவாளர் அலுவலகமானது மதுக்கூர்– மன்னார்குடி செல்லும் சாலையின் இடதுபுறம் அண்டமி கிராமத்திற்கு செல்லும் சாலையில் இடதுபுறம் கிழக்கு பார்த்தவாறு அமைந்துள்ள அரசு RCC கட்டிடத்தில் இயங்கி வருகிறது. மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தின் வாசலுக்கு எதிரே தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு துறை, கால்நடை மருந்தகம், மதுக்கூர் என்ற அலுவலகம் அமைந்துள்ளது. மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தின் வாசலில் பத்திரபதிவிற்காக வந்தவர்களின் நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் இரண்டு சக்கர வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. மேற்படி அலுவலகத்திற்குள் CCTV பொருத்தப்பட்டுள்ளது, அதுகுறித்து சார்பதிவாளர் அவர்களை விசாரணை செய்ய கடந்த 3 மாதங்களாக செயல்படவில்லை என்று தெரிவித்தார்.

4) மேற்படி கிழக்கு பார்த்து அமைந்துள்ள மதுக்கூர் சார் பதிவாளர் அலுவலக கட்டிடத்தின் நுழைவாயிலுக்கு முன்பு சுமார் 10X15 அளவுள்ள வரண்டாவும், அந்த நுழைவாயிலுக்கு அடுத்தாற்போல் சுமார் 15X15 அளவுள்ள வரவேற்பு அறையும்

அமைந்துள்ளது. அங்கு பத்திரப் பதிவிற்காக வந்து காத்துக்கொண்டிருந்த நபர்கள் விபரம் பின்வருமாறு:

வ. எண்.	பெயர் & முகவரி	ஆஜர் செய்த தொகை	விளக்கம்
1.	V காமராஜ், வயது 49/25 S/o. விவேகானந்தன், மெயின்ரோடு, பெரியக் கோட்டை, 90037901 29	200	தான் பத்திரப்பதிவிற்கு சாட்சி கையொப்பம் போட வந்ததாகவும், தனது சொந்த பணம் என்று தெரிவித்ததால், அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த பணம் அவரிடமே திரும்பி ஒப்படைக்கப்பட்டது.
2.	கனகாம்பாள் வயது 58/25 க/பெ.K. சாமி கண்ணு, கோபால சமுத்திரம், பெரிய கோட்டை, 9865941754	1000	தான் கிரையம் செய்து கொடுக்க வந்ததாகவும், தனது சொந்த பணம் என்று தெரிவித்ததால், அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த பணம் அவரிடமே திரும்பி ஒப்படைக்கப் பட்டது.
3.	D. விஜயராகவன், வயது 54/2025 S/o. துரைராஜ் மெயின்ரோடு, பெரியக் கோட்டை, 8098438 393	300	தான் பத்திரப் பதிவிற்கு சாட்சி கையொப்பம் போட வந்ததாகவும், தனது சொந்த பணம் என்று தெரிவித்ததால், அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த பணம் அவரிடமே திரும்பி ஒப்படைக்கப்பட்டது.
4.	திரு. த. விஜயகுமார், வயது 40/ 2025, த/பெ. தங்கராசு, கோபாலசமுத்திரம், பெரியக்கோட்டை, மதுக்கூர், பட்டுக்கோட்டை, செல்: 95971-18532	1500	தான் வாங்கிய நிலத்தை கிரைய பத்திரம் பதிவு செய்ய வந்ததாகவும், தனது சொந்த பணம் என்று தெரிவித்ததால், அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த பணம் அவரிடமே திரும்பி ஒப்படைக்கப் பட்டது.
5.	ஜெயசங்கர், வயது 65 த/பெ.இராமசாமி கோவில் காடு அத்தி வட்டி (po) தாமரங்கோட்டை வழி, மதுக்கூர் ஒன்றியம் பட்டுக்கோட்டை (TK) 9940737688	1050	தான் Bank-ல் வாங்கிய கடனுக்காக MOD செய்ய வந்ததாகவும், தனது சொந்த பணம் என்று தெரிவித்ததால், அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த பணம் அவரிடமே திரும்பி ஒப்படைக்கப் பட்டது.
6.	மணிகண்டன், வயது 32/25 த/பெ. திருமுருகன் எண்.384 சிவக்கொல்லை பட்டுக்கோட்டை செல் நம்பர் : 6380468045	945	தனது மாமியார் இடத்திற்கு வில்லங்கம் சான்றிதழ் எடுக்க வந்ததாகவும், தனது சொந்த பணம் என்று தெரிவித்ததால், அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த பணம் அவரிடமே திரும்பி ஒப்படைக்கப் பட்டது.

7.	பார்த்திபன் வயது 35/25 த/பெ. அசோகன், No.05, 28 நெம்மேலி, பட்டுக்கோட்டை (VK) செல் : 9791139 255.	2870	தான் பவர் பத்திரம் பதிவு செய்ய வந்தாகவும், தனது சொந்த பணம் என்று தெரிவித்ததால், அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த பணம் அவரிடமே திரும்பி ஒப்படைக்கப் பட்டது.
8.	முருகையன், வயது 60/25. த/பெ. கணேசன், தெற்கு தெரு, மதுக்கூர் வடக்கு, பட்டுக்கோட்டை (TK) செல். 9047439 56	90	தான் சாட்சி கையெழுத்து போட வந்ததாகவும், தனது சொந்த பணம் என்று தெரிவித்ததால், அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த பணம் அவரிடமே திரும்பி ஒப்படைக்கப் பட்டது.
9.	அசோகன், வயது 60/25 த/பெ.கலியப்பாபிள்ளை, தெற்கு தெரு, 28, நெம்மேலி, 75 9835 5183	5060	தான் பார்த்திபன் என்பவரிடம் பவர் பத்திரம் எழுதி வாங்க வந்தாகவும், தனது சொந்த பணம் என்று தெரிவித்ததால், அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த பணம் அவரிடமே திரும்பி ஒப்படைக்கப் பட்டது.
10.	திருமதி.லதா வயது 50/2025, க/பெ.பாலகிருஷ்ணன், 2/157 A, தெற்கு தெரு, பெரியக்கோட்டை (அஞ்சல்), மதுக்கூர், பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர். செல்: 9047459740	400	தான் எனது இடத்தை அருணா என்பவருக்கு கிரயம் செய்துக் கொடுக்க வந்தாகவும், தனது சொந்த பணம் என்று தெரிவித்ததால், அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த பணம் அவரிடமே திரும்பி ஒப்படைக்கப் பட்டது.
11.	திருமதி. சந்தியா, வயது 23 / 2025, க/பெ. செங்கோடன், 1/43, நடுத்தெரு, சொக்கணாவூர், மதுக்கர் (அஞ்சல்), பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர். செல்: 853197 1101.	200	தான் சாட்சி கையெழுத்து போட வந்ததாகவும், தனது சொந்த பணம் என்று தெரிவித்ததால், அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த பணம் அவரிடமே திரும்பி ஒப்படைக்கப் பட்டது.
12.	திருமதி.லோ. அருணா (வயது 36 / 2025), க/பெ. S. லோகநாதன், 2/154 C, வடக்கு தெரு, பெரியக் கோட்டை அஞ்சல், மதுக்கூர், பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர். செல்: 9843373007.	1800	தான் வாங்கிய நிலத்தை பத்திர பதிவு செய்ய வந்ததாகவும், தனது சொந்த பணம் என்று தெரிவித்ததால், அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த பணம் அவரிடமே திரும்பி ஒப்படைக்கப் பட்டது.

13.	திரு. மா. பாஸ்கர், வயது 44/2025, த/பெ.மாரிமுத்து, காலனி தெரு, புலவஞ்சி (அஞ்சல்), பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். செல்: 74487-74682.	500	தன்னுடைய நிலத்தை மணிமேகலை என்பவருக்கு கிரயம் செய்து கொடுக்க வந்ததாகவும், தனது சொந்த பணம் என்று தெரிவித்ததால், அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த பணம் அவரிடமே திரும்பி ஒப்படைக்கப் பட்டது.
14.	திருமதி. மல்லிகா, வயது 58/2025, க/பெ. காத்தமுத்து (லேட்), எண். 3/315, வாடியக்காடு தெற்குத் தெரு, விக்ரமம் (அஞ்சல்),மதுக்கூர் வழி, தஞ்சாவூர். செல் : 90425-70225.	500	தான் வீட்டுக்கடன் பெறுவதற்காக MOD செய்ய வந்ததாகவும், தனது சொந்த பணம் என்று தெரிவித்ததால், அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த பணம் அவரிடமே திரும்பி ஒப்படைக்கப் பட்டது.
15.	திருமதி. S. மணிமேகலை, வயது 65 / 2025, க/பெ.சக்திவேல், 2/117, புலவஞ்சி மேலத்தெரு, பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர். செல்: 9626887118	600	தான் வாங்கிய நிலத்தை பத்திர பதிவு செய்ய வந்ததாகவும், தனது சொந்த பணம் என்று தெரிவித்ததால், அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த பணம் அவரிடமே திரும்பி ஒப்படைக்கப் பட்டது.

5) மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தின் வரவேற்பு அறைக்கு தெற்கு பக்கத்தில் சுமார் 40x20 அளவுள்ள சார்பதிவாளர் மற்றும் அலுவலர்கள் ஆகியோர்கள் அலுவல் புரியும் பிரதான அறை அமைந்துள்ளது. அந்த பிரதான அறையில் மையப்பகுதியில் வடக்கு நோக்கி டேபிள் சேர் போடப்பட்டு, பின்னர் பெயர் விபரம் கேட்டறிந்த திரு.A.செல்வம், (DOB-10.06.1972), த/பெ.அண்ணாசாமி என்பவர் சார் பதிவாளர் இருக்கையில் அமர்ந்திருந்திருந்தார். மேற்படி சார் பதிவாளர் இருக்கையை சோதனை செய்தபோது, அவர் முன்பு போடப்பட்டிருந்த மரத்திலான டேபிளின் வலதுபுற டிராயரில் பேப்பர்களுக்கு இடையில் Registration Department என்று எழுதப்பட்ட காக்கி கவரினுள் ரூ.50,000/- (99X500, 100X5 = 50,000/-) பணம் சிவப்பு கலர் ரப்பர் பேண்ட் போட்டு சந்தேகத்திற்குரிய வகையில் காணப்பட்டது. அந்த பணம் பற்றி சந்தேக அலுவலர் திரு.செல்வம் அவர்களிடம் விளக்கம் கேட்க, தான் யாரிடமும் எந்த பணமும் வாங்கவில்லை என்றும், தனக்கு அந்த பணம் பற்றி எதுவும் தெரியாது என்றும், தான் காலை சுமார் 10.00 மணிக்கு பத்திரம் பதிவு செய்ய ஆரம்பித்தது முதல் எனது இருக்கையை விட்டு எங்கும் செல்லவில்லை என்றும்

தெரிவித்தார். மேற்படி ரூ.50,000/- பணம் பத்திரப் பதிவிற்காக பெற்ற கையூட்டு பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைக்காக ஆய்வுக்குழு அலுவலர்களால் கைப்பற்றப்பட்டது.

6) பின்னர் சந்தேக அலுவலர் மதுக்கூர் சார் பதிவாளர் திரு.செல்வம் அவர்களை சோதனை செய்ய, தான் அணிந்திருந்த பச்சை நிற முழுக்கை சட்டை இடதுபுற மேல் பாக்கெட்டிலிருந்து ரூ.450/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் பற்றி விளக்கம் கேட்க, தனது சொந்த பணம் என்று தெரிவித்தார். மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தில் தனிநபர் பணம் இருப்பு பதிவேட்டில் உள்ள பதிவுகளை ஆய்வு செய்ய, அதில் சந்தேக அலுவலர் திரு.A.செல்வம் என்ற பெயருக்கு நேராக வழி செலவிற்காக என எழுதி, ரூ.450/- என குறிப்பிடப்பட்டிருந்தது. அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேற்படி பணம் ரூ.450/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

7) பின்னர் மேற்படி சார்பதிவாளர் திரு.செல்வம் அவரது இருக்கைக்கு அருகில் சந்தேகத்திற்கிடமாக நின்றுக் கொண்டிருந்த பின்னர் பெயர் விபரம் கேட்டறிந்த திரு.சி.வெங்கடேஷ் என்பவரை விசாரிக்க, தான் ஆவண எழுத்தர் கிருஷ்ணமூர்த்தி, த/பெ.தங்கராசு, (உரிமம் எண் : B4/PKT/2000.) என்பவரிடம் நான் உதவியாளராக பணியாற்றி வருவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய தான் அணிந்திருந்த வெளிர் நீல நிற முழுக்கை சட்டை இடதுபுற மேல் பாக்கெட்டிலிருந்து ரூ.5,500/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் பற்றி விளக்கம் கேட்க, தான் இணையவழி மூலமாக Demand Draft எடுப்பதற்காக சிறமேல்குடி, நடுத்தெருவை சேர்ந்த முனியப்பன் மனைவி ராஜலெட்சுமி என்பவருக்கு MOD பட்டுக்கோட்டை முத்தூட் பைனான்சில் செய்து கொடுப்பதற்காக பெற்ற பணம் என்றும், தாங்கள் அதற்கான MOD பத்திரத்தை கேட்க, அந்த MOD பத்திரம் தன்னிடம் இல்லை என்றும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ள எந்தவித முகாந்திரம் இல்லாததால் மேற்படி ரூ.5,500/- பணம் பத்திரப் பதிவு செய்ய வந்தவர்களிடம் பெற்று, மதுக்கூர் சார் பதிவாளரிடம் கொடுக்க வைத்திருந்த கையூட்டு பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைக்காக ஆய்வுக்குழு அலுவலர்களால் கைப்பற்றப்பட்டது.

8) பின்னர் மேற்படி சார்பதிவாளர் திரு.செல்வம் அவரது இருக்கைக்கு அருகில் சந்தேகத்திற்கிடமாக நின்றுக் கொண்டிருந்த பின்னர் பெயர் விபரம் கேட்டறிந்த திரு.மு.முருகானந்தம் என்பவரை விசாரிக்க, தான் பத்திர எழுத்தராக உள்ளதாகவும், தனது பத்திர எழுத்தர் உரிம எண் A/807/PKT/1993 ஆகும் என்றும், இன்று (25-06-2025) மேல நத்தத்தைச் சேர்ந்த கண்ணன் என்பவர் அவரது மகன்

பெயரில் செட்டில்மெண்ட் பத்திரம் பதிவு செய்ய வந்ததாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்ய தான் அணிந்திருந்த வெள்ளை நிற சட்டையின் இடதுபுற மேல் பாக்கெட்டிலிருந்து இரண்டு கத்தைகளாக ரூ.10000/–, ரூ.3500/– மற்றும் ரூ. 840/– ஆகக்கூடுதல் ரூ.14,340/–ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் பற்றி விளக்கம் கேட்க, தான் DD எடுப்பதற்காக வைத்திருந்த பணம் என்றும், அதற்கு என்னிடம் ஆவணங்கள் எதுவுமில்லை என்றும், பணம் ரூ.3,500/– எப்போதும் பையில் வைத்திருக்கும் பணம் என்றும், ரூ.840/– செலவுக்கு வைத்திருந்த பணம் என்றும் தெரிவித்தார். மேற்படி ரூ.14,340/– பணம் பத்திரப் பதிவு செய்ய வந்தவர்களிடம் பெற்று, மதுக்கூர் சார் பதிவாளரிடம் கொடுக்க வைத்திருந்த கையூட்டு பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைக்காக ஆய்வுக்குழு அலுவலர்களால் கைப்பற்றப்பட்டது.

9) பின்னர் அலுவலக பதிவேடுகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் தொடர்பாக விபரங்கள் கேட்க, கீழ்கண்ட பதிவேடுகளை ஆஜர் செய்தார்.

(1) மதுக்கூர் சார்பதிவாளர் அலுவலக பணியாளர்கள் வருகை பதிவேடு மொத்தம் பக்கங்கள் 28–இல் பக்கம் 05 வரை பதிவுகள் உள்ளது.

(2) மதுக்கூர் சார்பதிவாளர் அலுவலக TCS – பணியாளர்கள் வருகை பதிவேடு மொத்தம் பக்கங்கள் 27–இல் பக்கம் 13 வரை பதிவுகள் உள்ளது.

(3) பணம் இருப்பு பதிவேடு துவக்கம் – 23.05.2025 மொத்தம் தாள்கள் 10–ல் 3 தாள்கள் மட்டும் பதிவுகள் உள்ளது.

(4) கணினி மூலம் பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்ட – ஆண்டு 2025 மாதம் ஜுன் 'எ' கணக்கு மதுக்கூர் – தேதி தொடக்கம் 25–JUN–2025 முடிவு 25–JUN–2025 (ஒரு தாள் மட்டும்)

(5) கணினி மூலம் பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்ட – ஆண்டு 2025 மாதம் ஜுன் Sub division Account மதுக்கூர் – தேதி தொடக்கம் 25–JUN–2025 முடிவு 25–JUN–2025 (ஒரு தாள் மட்டும்)

(6) கணினி மூலம் பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்ட – ஆண்டு 2025 மாதம் ஜுன் 'டி' கணக்கு மதுக்கூர் – தேதி தொடக்கம் 25–JUN–2025 முடிவு 25–JUN–2025 (ஒரு தாள் மட்டும்)

(7) கணினி மூலம் பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்ட – ஆண்டு 2025 மாதம் ஜுன் 'எச்' கணக்கு மதுக்கூர் – தேதி தொடக்கம் 25–JUN–2025 முடிவு 25–JUN–2025 (ஒரு தாள் மட்டும்)

(8) கணினி மூலம் பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்ட – ஆண்டு 2025 மாதம் ஜுன் Section 41 Account மதுக்கூர் – தேதி தொடக்கம் 25-JUN-2025 முடிவு 25-JUN-2025 (இரண்டு தாள்கள் மட்டும்)

(9) கணினி மூலம் பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்ட – ஆண்டு 2025 மாதம் ஜுன் வலைய நெறிமுறை புகைப்படக் கணக்கு / குறுந்தகடுக் கணக்கு மதுக்கூர்– தேதி தொடக்கம் 25-JUN-2025 முடிவு 25-JUN-2025 (ஒரு தாள் மட்டும்)

(10) கணினி மூலம் பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்ட – பிறப்பு / இறப்பு கட்டணப் பதிவேடு – தேதி தொடக்கம் 25-JUN-2025 முடிவு 25-JUN-2025 (ஒரு தாள் மட்டும்)

மேற்கண்ட ஆவணங்கள் அனைத்தும் விசாரணைக்காக ஆய்வுக்குழு அலுவலர்களால் கைப்பற்றப்பட்டது.

10) மேற்படி சார் பதிவாளர் இருக்கைக்கு இடதுபுறம் பத்திரபதிவு செய்ய வருபவர்களை கணினியில் படம் மற்றும் கைரேகை பதிவு செய்யும் Data Entry Operator இருக்கை காணப்படுகிறது. அந்த இருக்கையில் அலுவலில் இருந்த, பின்னர் பெயர் விலாசம் கேட்டறிந்த Data Entry Operator திருமதி.A.ரமேலா அவர்களை சோதனை செய்தபோது, அவரது ஹேண்ட்பேக்கில் ரூ.400/– பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் பற்றி கேட்க, தான் வழிச் செலவிற்காக ரூ.500/– எடுத்து வந்ததாகவும், அதில் ரூ.100/– சாப்பாட்டிற்காக கொடுத்ததாகவும் தெரிவித்தார். மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தில் தனிநபர் பணம் இருப்பு பதிவேட்டில் உள்ள பதிவுகளை ஆய்வு செய்ய, அதில் 25.06.25 என தேதி குறிப்பிட்டு, திருமதி.அ.ரமேலா என்ற பெயருக்கு நேராக வழி செலவிற்காக என எழுதி, ரூ.500/– என குறிப்பிடப்பட்டிருந்தது. அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேற்படி பணம் ரூ.400/– அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி Data Entry Operator திருமதி.A.ரமேலா அமர்ந்திருந்த இருக்கையை சோதனை செய்ய, சந்தேகத்திற்கிடமான பணமோ, ஆவணங்களோ எதுவும் காணப்படவில்லை.

11) மேற்படி Data Entry Operator இருக்கைக்கு நேர் எதிரே டேபிள் மரத்திலான டேபிள் சேர் போட்டப்பட்டு அமர்ந்திருந்த நபரிடம் பினனர் பெயர் விலாசம் கேட்டறிந்த திரு.V.கமல குருகுமரன், த/பெ. வரதராஜன் என்பவர் அமர்ந்து, பணி செய்து கொண்டிருந்தார். அவரிடம் விபரம் கேட்க, தான் அதிராம்பட்டினம் சார்–பதிவாளர் அலுவலகத்தில் காவலராக பணி செய்து, அதன் பின்னர் அயல் பணியாக மதுக்கூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் காவலராக பணியாற்றி வருவதாக தெரிவித்தார். அலுவலக நேரங்களில் பத்திரப் பதிவிற்கு வரும் நபர்களிடம் கையெழுத்து மற்றும் கைரேகை பெறுவது மற்றும் தபால் போடுவது ஆகிய

பணிகளை செய்து வருவதாக தெரிவித்தார். மேற்படி காவலர் திரு.V.கமல குருகுமரன் அவர்களை சோதனை செய்ய, அவரது மேல் சட்டை பாக்கெட்டிலிருந்து ரூ.140/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் பற்றி கேட்க, தான் சொந்த செலவிற்காக ரூ.140/- வைத்திருந்ததாக தெரிவித்தார். மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்தில் தனிநபர் பணம் இருப்பு பதிவேட்டில் உள்ள பதிவுகளை ஆய்வு செய்ய, அதில் 25.06.25 என தேதி குறிப்பிட்டு, திரு.V.கமல குருகுமரன் என்ற பெயருக்கு நேராக ரூ.140/- என குறிப்பிடப்பட்டிருந்தது. அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேற்படி பணம் ரூ.140/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவர் அமர்ந்திருந்த டேபிளை சோதனை செய்ததில் சந்தேகத்திற்கிடமான பணமோ, ஆவணங்களோ காணப்படவில்லை.

12) பின்னர் மேற்படி பிரதான அறையில் மேற்கு பக்கம் ஒரு மர டேபிள் சேர் போடப்பட்டிருந்தது. அந்த இருக்கையில் யாரும் பணியில் காணப்படவில்லை. அந்த இருக்கையை சோதனை செய்ய சந்தேகத்திற்கிடமான பணமோ, ஆவணங்களோ காணப்படவில்லை.

13) மேற்படி பிரதான அறைக்கு கிழக்கு பக்கம் சுமார் 20X10 கணினி அறை அமைந்துள்ளது. அதில் இரண்டு Desktop Computers மற்றும் ஒரு HP Multi-option Printer ஆகியவை காணப்பட்டன. அந்த அறையில் CCTV - Operator திருமதி.தென்றல் என்பவர் பணியில் இருந்தார். மேற்படி நபரை சோதனை செய்தபோது, அவரது ஹேண்ட்பேக்கில் ரூ.230/- பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் பற்றி கேட்க, தான் ரூ.400/- எடுத்து வந்ததாகவும், சாப்பாடு செலவு போக மீதத்தொகை ரூ.230/- வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தில் தனிநபர் பணம் இருப்பு பதிவேட்டில் உள்ள பதிவுகளை ஆய்வு செய்ய, அதில் 25.06.25 என தேதி குறிப்பிட்டு, திருமதி.M.தென்றல் என்ற பெயருக்கு நேராக சொந்த செலவு என எழுதி ரூ.400/- என குறிப்பிடப்பட்டிருந்தது. அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேற்படி பணம் ரூ.230/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவர் அமர்ந்திருந்த டேபிளை சோதனை செய்ததில் சந்தேகத்திற்கிடமான பணமோ, ஆவணங்களோ காணப்படவில்லை.

14) அந்த அறையில் அமர்ந்து பணி செய்து கொண்டிருந்த, பின்னர் பெயர் விபரம் கேட்டறிந்த திருமதி.A.திவ்யா, க/பெ தினகரன் என்பவரிடம் விசாரணை செய்ய, தான் கடந்த 5 வருடங்களாக மதுக்கூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியாற்றி வருவதாக தெரிவித்தார். மேற்படி காவலர் திருமதி.A.திவ்யா அவர்களை பெண் காவலர் திருமதி.சிலம்புசெல்வி மூலம் சோதனை செய்ய, அவரது அவரது ஹேண்ட்பேக்கிலிருந்து ரூ.120/- எடுத்து ஆஜர்

செய்தார். அந்த பணம் பற்றி கேட்க, தான் சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்தில் தனிநபர் பணம் இருப்பு பதிவேட்டில் உள்ள பதிவுகளை ஆய்வு செய்ய, அதில் 25.06.25 என தேதி குறிப்பிட்டு, திருமதி.திவ்யா என்ற பெயருக்கு நேராக வழிச்செலவு என எழுதி, ரூ.120/- என குறிப்பிடப்பட்டிருந்தது. அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேற்படி பணம் ரூ.120/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவர் அமர்ந்திருந்த டேபிளை சோதனை செய்ததில் சந்தேகத்திற்கிடமான பணமோ, ஆவணங்களோ காணப்படவில்லை.

15) மேற்படி பிரதான அறையில் சார்பதிவாளர் இருக்கைக்கு பின்புறம் சுமார் 20x50 அளவுள்ள பதிவுறு வைப்பறை அமைந்துள்ளது. அந்த பதிவுறு வைப்பறையில் ஆவணங்கள் வைப்பத்திற்கு இரும்பிலான பீரோக்கள், கடப்பா கல்லினாலான செல்ப்களில் பதிவேடுகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி பதிவுறு வைப்பறையை சோதனை செய்ய, சந்தேகத்திற்கிடமான பணம் எதுவும் காணப்படவில்லை.

16) மேற்படி பிரதான அறையின் வடக்கு பக்கம் உணவருந்த அறை மற்றும் கழிப்பறையும் அமைந்துள்ளது. மேற்படி அறைகளை சோதனை செய்ய, சந்தேகத்திற்கிடமான பணமோ, ஆவணங்களோ காணப்படவில்லை. 13) மேலும் திடீர் சோதனையின்போது சந்தேக அலுவலர் (1) திரு.செல்வம், சார் பதிவாளர், மதுக்கூர் சார்பதிவகம், சந்தேக நபர் (2) திரு.சி.வெங்கடேஷ் மற்றும் (3) திரு.முருகானந்தம் ஆகியோரிடம் தனித்தனியாக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்களால் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

17) இந்த திடீர் சோதனை நிகழ்வுகள் தலைமை காவலர் 1288 திரு.A.உலகநாதன் அவர்களால் வீடியோ பதிவு செய்யப்பட்டது.

18) இந்த திடீர் சோதனை செயல்முறைகள் இன்று 25.06.2025 மாலை 17.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

இந்த தீடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட மேற்படி பணம் ஆவணம் வாக்குமூலங்கள் தயார் செய்யப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றை இத்துடன் இனைத்து ஆஜர்படுத்துகிறேன். இது குறித்து சட்டபடி உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். (sd) (M.அய்யம்பெருமாள்) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் மாவட்டம். Sir, received the complaint on 25.06.2025 at 21.00 hrs. found prima facie for the allegation of the complaint. Since the matter is intimated to the SP/CR, V&AC, Chennai obtained permission from the

SP/CR, V&AC, Chennai and registered a case in Thanjavur V&AC Crime Number 05/2025 U/s 106 of BNSS and 7, 7A, 8 r/w 12 of Pc Act 1988 (as amended in 2018) on 25.06.2025 at 21.30 hrs (sd) R. Arun Prasad, Inspector of Police, V&AC, Thanjavur.

Sir, The original FIR along with the Complaint, Surprise Check Proceedings and statements of accused are sent to the Principle District and Sessions Judge, Court, Thanjavur, other copies sent to the senior officers and concerned investigation officer.

R. Arun Prasad 25/6/25

Inspector of Police,
Vigilance and anti-Corruption
Thanjavur.

Name and address of the accused in conlumn Number 7 of the FIR in Thanjavur V&AC Crime Number 05/2025 U/s 106 of BNSS and 7, 7A, 8 r/w 12 of Pc Act 1988 (as amended in 2018).

1. திரு.A.செல்வம், வயது 53/2025, த/பெ.அண்ணாசாமி, சார்பதிவாளர் (பொறுப்பு), சார்பதிவாளர் அலுவலகம், மதுக்கூர். இருப்பிட முகவரி: வேல்விமங்களம், வயலபாடி அஞ்சல், துங்கபுரம், பெரம்பலூர் மாவட்டம்.

2. திரு.C.வெங்கடேஷ் வயது 35/2025, த/பெ.சின்னப்பிள்ளை, எண்.12, வ.உ.சி நகர், மதுக்கூர், பட்டுக்கோட்டை தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்.

3. திரு.மு.முருகானந்தம், வயது 60/2025, த/பெ.முத்து பெரமையன், ஆவண எழுத்தர், கதவு எண் 15/1, ஆற்றங்கரைத் தெரு, மதுக்கூர் தெற்கு, பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

25/6/25

Inspector of Police,
Vigilance and anti-Corruption
Thanjavur.